பெருநகர சென்னை மாநகராட்சி
செய்தி வெளியீடு

செ.வெ.எண். 90 நாள்: 26.07.2017

# டெங்கு விழிப்புணர்வு மற்றும் காய்ச்சல் குறித்த கணக்கெடுக்கும் பணி பெருநகர சென்னை மாநகராட்சி பொதுசுகாதார கல்வித்துறை மூலம் மேற்கொள்ளப்பட்டது.

பெருநகர சென்னை மாநகராட்சியில், பொது சுகாதார கல்வித்துறை சார்பாக பல்வேறு விதமான நோய்த் தடுப்பு விழிப்புணர்வு முகாம்கள் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகின்றன.

பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் முனைவர்.தா.கார்த்திகேயன்,இ.ஆ.ப., அவர்கள், மழைக்காலம் தொடங்க உள்ளதால் குடிசைப்பகுதிகளில் கொசுப்புழுக்கள் உருவாகும் விதம், அவற்றை தடுக்கும் முறைகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்துமாறும், களப்பணியாளர்கள் கொண்டு வீடுதோறும் காய்ச்சல் உள்ளதா என்று ஆய்வு நடத்தி உரிய நடவடிக்கை எடுக்குமாறும் அறிவுறுத்தியுள்ளார்.

அதன் பேரில், 26.07.2017 அன்று அண்ணாநகர் மண்டலத்தைச் சேர்ந்த சுகாதார பணியாளர்கள் மற்றும் பில்ரோத் மருத்துவமனை செவிலியர் கல்லூரி மாணவிகள் வீடுவீடாக சென்று டெங்கு காய்ச்சலால் பாதிக்கப்பட்டவர்கள் உள்ளனரா என்பது குறித்த கணக்கெடுப்பும், டெங்கு காய்ச்சலை பரப்பும் கொசுக்களான ஏடிஸ் கொசு உருவாகும் விதம், அதன் வாழ்க்கை சுழற்சி முறை, அவைகள் தங்கி முட்டைகள் இடும் முறை குறித்தும், நோய் பரப்பும் விதம் குறித்தும், கொசுக்களை கட்டுப்படுத்திட பொதுமக்கள் மேற்கொள்ள வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்தும், வீடுகள்தோறும் கொசுப்புழு உள்ள பாட்டில்கள் காண்பித்து, கொசுப்புழுக்கள் எவ்வாறு இருக்கும், அவற்றை உருவாகாமல் தடுக்கும் முறைகள் குறித்தும் பொதுமக்களிடம் விளக்கப்பட்டது. மேலும், ஏராளமான பொதுமக்களுக்கு நிலவேம்பு குடிநீர் வழங்கப்பட்டது.

சுகாதாரப் பணியாளர்கள் மற்றும் செவிலியர் பயிற்சி மாணவியர்கள் 500க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்ட சுகாதார விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது. பேரணியானது லட்சமி டாக்கிஸ் தெருவில் தொடங்கி, பூந்தமல்லி நெடுச்சாலை, டி.பி. சத்திரம் மெயின் சாலை, 15வது குறுக்குத் தெரு, கஜபதி தெரு, நாதமுனி தெரு வரை நடைபெற்றது. மேலும், கொசு ஒழிப்பு மற்றும் டெங்கு காய்ச்சல் குறித்து விழிப்புணர்வு பதாகைகள் ஏந்தி, மேள, தாளத்துடன் விழிப்புணர்வு வாசகங்களை கோசமிட்டவாறு வந்தனர். டெங்கு கொசு வேடமிட்ட சுகாதாரப்

பணியாளரால் விழிப்புணர்வு துண்டு பிரசுரங்கள் அனைத்து வீடுகளுக்கும் வழங்கப்பட்டன. மேலும், கொசுப்புழு உருவாக காரணமாக இருக்கும் தேவையற்ற பொருட்களும், மாநகராட்சி மூன்று சக்கர வண்டி மூலம் அகற்றப்பட்டன

இந்நிகழ்ச்சியில், மத்திய கூடுதல் சுகாதார அலுவலர் மரு.இ.சரஸ்வதி, சுகாதாரக் கல்வி அலுவலர் முனைவர்.டி.ஜி.சீனிவாசன், அண்ணாநகர் மண்டல சுகாதாரத் துறையினர் மற்றும் பில்ரோத் மருத்துவமனை நிர்வாகிகள், செவிலியர் கல்லூரியைச் சேர்ந்தவர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு : துணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**